உ

சுழிபுரம் மேற்கு

## பாரதி முன்பள்ளி

புதிய கட்டடத் திறப்பு விழாவை முன்னிட்டு
பாரதி கலை மன்றத்தினர் வெளியிடும்




# சிறப்பு மலர்

16.11.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சுழிபுரம்

## பாரதி முன்பள்ளி

புதிய கட்டட திறப்பு விழாவை முன்னிட்டு

பாரதி கலை மன்றத்தினர் வெளியிடும்

# சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று....!



# புதிய நுழைவாயில்....!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று....!








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி முன்பள்ளி

பாரதி கலை மன்றத்தின் "பாரதி முன்பள்ளி" 1984இல் எமது கிராம சிறார்களின் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்டது பத்திற்கும் குறைவான மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட "பாரதி சிறுவர் பாடசாலை" இப்போதைய கலை மன்றத்திற்கு அருகாமையில் அப்போது கலை மன்றம் இயங்கி வந்த திரு வி.பராபரன் அவர்களின் இல்லத்து திண்ணையில் தனது கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்த வேளையில் அங்கு போதிய இடவசதியின்மையால் மன்றத்திற்கு எதிர்ப்புறமாக உள்ள திரு மு.விசாகப்பெருமாள் அவர்களின் இல்லத்திற்கு மாற்றப்பட்டது. 1984 இன் பிற்பகுதியில் அப்போதைய மன்றத் தலைவர் அமரர் திரு ச. சற்குணராஜர (செட்டி) அவர்கள் மேற்கொண்ட அயராத முயற்சியின் காரணமாக திரு வி.உமாபதி அவர்கள் குத்தகை அடிப்படையில் வழங்கிய காணியில் பாரதி கலைமன்றத்திற்கென புதிய கட்டடம் அமைக்கும் பணியில் தொடர்ந்து பொறுப்பேற்ற தலைவர் திரு பொ.குகானந்தன் அவர்களும் பொருளாளர் திரு.ம. இரவீந்திரன் அவர்களும் ஏனைய நிர்வாக உறுப்பினர்களுடன் இணைந்து 1987 இன் முற்பகுதியில் பாரதி கலை மன்ற புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டதனை தொடர்ந்து பாரதி சிறுவர் பாடசாலை மன்ற கட்டிடத்தில் இயங்க ஆரம்பித்தது. பத்திற்கும் குறைவான மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் பாடசாலையானது மாணாக்கரின் எண்ணிக்கை அதிகரிப்புடன் படிப்படியான வளர்ச்சி கண்டு கல்விச் செயற்பாடுகளுக்கிணையாக உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுச் செயற்பாடுகளினையும் மேற்கொண்டது. இதற்கான போதிய மைதான வசதி இல்லாதிருந்தபோது மன்ற அருகாமையில் உள்ள திருமதி கு.பராசக்தி அவர்களின் வளவில் தனது புறநிலையச் செயற்பாடுகளை நடாத்தி மேலும் சில பத்து மாணாக்கர்களின் எண்ணிக்கை அதிகரிப்புடன் சுமார் 50 மாணாக்கர்களை நெருங்கியும் கடந்தும் வந்த வேளையில் .சுமார் 400 சதுரஅடி பரப்பளவு கொண்ட மன்ற கட்டிடத்தில் இதற்கு மேலும் தாக்குப் பிடிக்க இயலாது என்ற நிலை வந்தபோது சுழிபுரம் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க காணியில் அமரர் க.கணபதிப்பிள்ளை அவர்கள் மேற்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக சுழிபுரம் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கென கட்டப்பட்டு ஸ்ரீ கணேச சனசமூக நிலையம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியன இயங்கி வந்த கட்டிடத்திற்கு 2009ஆம் ஆண்டு ஆவணியில் மாற்றப்பட்டது. அங்கும் சுமார் 60 மாணாக்கரைக் கடந்த வேளையில் இதன் அருகில் அமர்ந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ கதிர் வேலாயுதசுவாமி கோவில் மஹோற்சவ காலங்களின் போதும் திருமண வைபவங்களின் போதும் ஏனைய பொது நிகழ்வுகளின்போதும் இக்கட்டிடம பயன்பட வேண்டிய தேவை உள்ளதனால் முன்பள்ளி இயங்க இயலாத நிலை ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காரணமாகவும் உரித்தான நிலத்தில் சொந்தக் கட்டிடம் அமைய வேண்டும் என்னும் பற்றுறுதி காரணமாகவும் 2008 இல் பாரதி முன்பள்ளியின் முன்னாள் ஆசிரியையும் பெற்றார் சங்க போஷகருமாகிய திருமதி சுதாகரன் ஜெயரஞ்சனி அவர்கள் தலைமையில் முன்பள்ளி கட்டிட நிர்மாணிப்புக் குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, குழுவினரின் வழிகாட்டுதலின் கீழ் திரு த. ஞானலிங்கமூர்த்தி அவர்கள் ஊடாக , தெய்வீக வளம் செறிந் சூழலில் ஆலய தீர்த்தக் கேணியை பார்வைப் புலமாக கொண்டதுமான பண்டாஓடை காணியில் 5 பரப்பு காணி, திரு வடிவேல் வசந்தகுமார் அவர்களிடம், நா.சுப்பையா குடும்பத்தினர், மகாலிங்கம் குடும்பத்தினர், சீவரத்தினம் குடும்பத்தினர் அன்பளிப்பாக வழங்கிய நிதியுதவியுடன் கொள்வனவு செய்யப்பட்டது. புலம் பெயர்ந்து வாழும் ஏனைய முன்பள்ளி சமூகத்தினர் , கிராமத்தவர்கள், நலன் விரும்பிகள், பெற்றார்கள் மூலம் சேகரித்த நிதியுதவியுடன் மாரி காலத்தில் பெருமழைக் காலங்களில் $2\frac{1}{2}$ அடி வரையில் வெள்ளம் நின்று, வெள்ளக்காடாக காட்சி தரும் $7\frac{1}{2}$ இலட்சம் பெறுமதியான காணிக்கு சுமார் 5 இலட்சம் வரையில் செலவு செய்து மண் கொண்டு நிரப்பி சிறு குட்டை போன்று காணப்பட்ட நிலப்பரப்பினை சிறார்கள் தவழ்ந்து விளையாட கூடிய நிலப்பரப்பாக மாற்றிய பெருமையைக் கொண்ட முன்பள்ளி சமூகத்தினர் நினைவிற் கொள்ளப்படவேண்டியவர்கள்.

கட்டிட அமைவிடம் கிடைத்த போதிலும் நிரந்தர- போதிய வசதி கொண்ட கட்டிடம் அமைப்பதற்கான நிதியை பெற்றுக் கொள்வதற்காக நிர்வாகம் அரச, உள்ளூராட்சி, தொண்டு நிறுவனங்கள், இந்தியத் துணைத்தூதரகம் ஆகியவற்றிடம் மேற்கொண்ட முயற்சிகள் சொல்லில் அடங்காது. இவ்வாறு கையறு நிலையில் இருந்த பாரதி முன்பள்ளி சமூகத்தினருக்கு கை கொடுக்க முன்வந்தனர் சுழிபுரம் கல்வி அபிவிருத்திக் குழுவினர். அவ்வேளையில் புனரமைக்கப்பட்ட றிட்ஜ்வே மண்டப கையளிப்பு நிகழ்விற்காக ஐக்கிய இராச்சிய விக்ரோறிய பழைய மாணவர் ஒன்றிய சார்பில் வருகை தந்திருந்த காப்பாளர் திரு.த. உலகநாதன் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் திரு.சி.இரவிசங்கர் ஆகியோருடன் கல்வி அபிவிருத்திக் குழுவினரும் முன்பள்ளி சமூகத்தினரும் 7-12-2012 இல் கலந்துரையாடினர். நிறைவாக விக்ரோறியாக் கல்லூரிக்கு ஊட்டற் பாடசாலையாக பாரதி முன்பள்ளியும் மறைமுகமாக திகழ்வதனால் இதற்கான அனுசரணையை வழங்குவதற்கு தமது உறுப்பினர்கள் முன்வரவேண்டுமென காரியதரிசி திரு தா.கமலநாதன் அவர்கள் கொடுத்த ஆலோசனைக்கு அமைவாக எமது ஊரவரான கொடையாளர் சி.இரவிசங்கர் அவர்கள் முழுநிறைவான நவீன தொழில் நுட்ப வசதிகளைக் கொண்ட கட்டிடத்தினை அமைத்துத் தர முன்வந்தார். கட்டிடத்திற்கான அடிக்கல், விக்ரோறியாக் கல்லூரியின் அதிபரும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அபிவிருத்திக் குழுவின் தலைவருமாகிய திரு வ.ஶ்ரீகாந்தன் அவர்களால் 11-04-2013 இல் நாட்டப்பிபட்டு திரு சி.இரவிசங்கர் அவர்களதும், அவர்தம் குடும்பத்தினரதும் இரவு-பகல் பாராத வழி காட்டலின் பேரில் "நவீன உலகின் சவால்களை எதிர் கொள்ளவிருக்குசும் மாணவ சிறார்களிற்கு பலமான அத்திவாரத்தினை இடல்" எனும் தொனிப்பொருளுடன் 16-11-2013 ம் திகதியாகிய இன்று புதிய கட்டிடம் பாரதி முன்பள்ளி சமூகத்தினரிடம் கையளிக்கப்படுகின்றது.

பொன்னெழுத்தக்களால் பொறிக்கப்படவேண்டிய இந்நன்னாளில் பல படிமுறைகளைக் கொண்டிருந்த சுமார் 5 வருடங்கள் வரையில் நீடித்த இச் செயல் திட்டத்திற்கு உரிய வேளையில் உரிய உதவிகள் புரிந்தவர்கள் அனைவரும் என்றென்றும் நினைவிற் கொள்ளப்படுவர்.

அறிவு: ஆக்கத்தை அளிப்பது மட்டுமல்ல
அநியாயத்தை அழிப்பதும்.

ஒற்றுமை: திரண்டால் மிடுக்குத்தான் ஆனால்
மிடுக்குள்ள இடத்தில் திரள்வதே சிறந்த
நடைமுறை

சுதந்திரம்: தனிமனித நோக்கில் நியாயம், ஆனால் சமூக
நோக்கில் தருமம்

போராட்டம்: கூர்ப்பின் முதற்படி ஆயினும் கொடுமைக்குக்
கொடுக்கும் அடி

கட்டுப்பாடு: அநியாயத்தை நோக்கியது அடக்கு முறை
நியாயத்தை நோக்கியது நோக்கியது
வாழ்க்கை நெறி.

மழலைக்கு அன்பு தாயிடம் - நன்மகிழ்வு
சிறுவனுக்கு அன்பு ஆசிரியரிடம் - நன் மதிப்பு
இளைஞனுக்கு அன்பு சமூகத்திடம் - நல்உறவு
கற்றவனுக்கு அன்பு தேசத்திடம் - நல் பிரஜை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரோறியா கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது சுழிபுரம் கிராமம் பல்வேறு சிறப்புக்களையும் தனித்துவத்தையும் தன்னகத்தே கொண்ட பெருமை மிக்கதாகும். கல்வி, பண்பாடு, கலாசார விழுமியங்கள் கொண்ட இங்கு பல்வேறு துறைசார் நிபுணத்துவம் கொண்டவர்கள் வாழ்ந்த, வாழ்கின்ற நிலையில் காலத்தேவைக்கேற்ப மாற்றங்களை உள்வாங்கி புதுமையும் பழமையும் கலந்த வாழ்க்கை நெறியில் நாம் சென்று கொண்டிருக்கின்றோம்.

கல்வியைத் தமது மூலதனமாகக் கருதும் எம்மக்கள், எதை இழந்தாலும் கல்வியைப் பெற வேண்டும் என்ற அவாவோடு செயற்படுகின்றார்கள். இதனால் எங்கள் கிராமத்தில் முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகள் இங்குள்ளவர்களாலும், புலம்பெயர்ந்துள்ள எம்மவர்களாலும் உயர்நிலைக்கிட்டுச் செல்லப்படுவதை தற்போது காண்கின்றோம். வாழ்வாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களும் தம் சந்ததியின் மலர்வுக்கு கல்வியே உதவும் என்ற உணர்வுக்குட்படுகின்றார்கள்.

எமது பிரதேச முன்பள்ளிகளில் சிறார்களுக்கு வழங்கப்படும் கல்வி மற்றும் ஏனைய வலுவூட்டும் நிகழ்வுகள் அவர்கள் ஆரம்பக் கல்வியிலும் தொடர்ந்து இடைநிலை, உயர் கல்விகளிலும் ஆளுமை மிக்கவர்களாக உயரவும் சமூகத்தில் பலம் மிக்க பிரஜைகளாக மிளிரவும் உதவுகின்றன.

பாரதி முன்பள்ளி ஒரு தனித்துவமான நிறுவனமாக இயங்குவதை இப் பிரதேசத்திலுள்ள அனைவரும் அறிவர். அதிகளவு மாணவர்களைக் கொண்டதாகவும் துலங்கல் மிக்கவர்களை உருவாக்கி ஆரம்பப் பிரிவுக் கல்விக்கு அனுப்புவதாகவும் உள்ள இம் முன்பள்ளியில் பயில்பவர்களில் அநேகர் எமது கல்லூரியின் பிரதான ஊட்டல் பாடசாலையாகிய சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலையில் இணைகின்றனர். கல்வியின் அடித்தளத்தை அங்கு பெறும் இம்மாணவர்கள் இடைநிலை, உயர்தரக் கல்வியைப் பெற விக்ரோறியாக் கல்லூரியையே நாடுகின்றனர். அக் கல்லூரியிலும் இவர்கள் கல்வி மற்றும் இணைப் பாடவிதான செயற்பாடுகளில் மிகுந்த திறன்களை வெளிப்படுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமை வாய்ந்த பாரதி முன்பள்ளிக்கு தனியான ஒரு கல்விக் கூடம் இல்லாமை பெரும் குறைபாடாக இருந்தது. பாரதி கலைமன்றத் தலைவர் திரு.து.இரவீந்திரன் மற்றும் அவரோடிணைந்து செயற்படும் நிர்வாக உறுப்பினர்களின் அளப்பரிய முயற்சியால் அழகான கட்டிடம் உருவாக்கப்பட்டுள்ளது. நிலம் பெறப்பட்டு எல்லை மதில்கள் அமைக்கப்பட்டு அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு உயரிய சிந்தனையின் செயல்வடிவமாக பாரதி முன்பள்ளி கட்டிடம் காட்சி தருகின்றது. பலரது கூட்டுமுயற்சியின் பின்னால் இன்னோர் உத்தமர் உள்ளார். எம் மண்ணின் புதல்வன் திரு.சி.ரவிசங்கர் அவர்கள் இப்பணிகளில் பெரும் பகுதியின் பங்காளியாக நிற்கின்றார். சுழிபுரம் கிராமத்தின் கல்வி வளர்ச்சியை நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்ட கல்வி அபிவிருத்திக் குழு எல்லோருடைய உதவிகளையும் ஒன்று திரட்டி சிறார்களின் தேவைகளை நவீனமுறையில் நிறைவு செய்துள்ளனர்.
கல்வி அபிவிருத்திக் குழுவின் செயலாளர் கலாநிதி செ.கண்ணதாசன், பொருளாளர் திரு.து.ரவீந்திரன் மற்றும் உறுப்பினர்கள் யாவரும் பாராட்டுக்குரியவர்கள். கல்விப் புலம் சார்ந்தவன் என்ற நிலையிலும் கல்வி அபிவிருத்திக்குழுவின் தலைவர் என்ற வகையிலும் இம் முயற்சிகளில் ஈடுபடும் அனைவரையும் மனதாரப் போற்றுகின்றேன். முன்பள்ளியின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ மழலைகள் எல்லோருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து கலைமன்றமும் முன்பள்ளியும் மேலும் ஓங்கி உயர ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகளின் பாதம் பணிந்து நிறைவு செய்கின்றேன்.

வரதராஜசர்மா ஸ்ரீகாந்தன்
அதிபர்,
யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

*Web : WWW.Victoriacoll.sch.lk*
*E mail : victoriacollege@yahoo.com*
*Date:10-11-2013*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாரதி முன்பள்ளி சமூகத்தில், கட்டிட நிர்மாணிப்பிற்கான முன் முயற்சி மேற்கொண்ட அமரர் இ.சுதாகரன் அவர்களின் தந்தையின் உள்ளத்தில் இருந்து.......**

S .Ramachandra J.P.
Regd. No2000/08/NE/JA//767
Moolai Road ,Vaddukoddai

சுழிபுரம் மேற்கிலமைந்துள்ள பாரதி முன்பள்ளியின் கட்டிடத் திறப்பு நிகழ்வையொட்டி மனமகிழ்ச்சியடைகின்றேன். மனித வாழ்வு கருவறை தொடக்கம் கல்லறை வரையிலான காலத்தைக் கொண்டுள்ளது. இக்காலப்பகுதி முழுவதும் கற்றல் தொழிற்பாடு நடைபெறுகின்றது.

கற்றல் தொழிற்பாட்டின் ஆரம்பம் கருவறையில் ஐந்தாவது மாதம் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். எனவே ஆரம்ப ஆசிரியர் மாதா என இனங்காட்டப்படுகின்றார். அடுத்ததாக ஆசிரியர் வரிசையில் தந்தை இடம் பெறுகின்றார். மூன்றாம் நிலையில் குரு இணைகின்றார். மாதா, பிதா, குரு ஆகியோரின் வழிகாட்டலில் அறிவு வளர்கையில் மறைநிலையில் தெய்வம் அனுக்கிரகம் செய்கின்றது. இது மத ரீதியிலான எண்ணமும் கூட.

முறையான கல்வி பாடவிதானங்களுக்கமைய ஐந்தாவது வயதில் ஆரம்பமாகின்றது. இந்த வயதிற்கு முற்பட்ட காலத்தில் ஆடல், பாடல், விளையாட்டு போன்றவற்றினூடாக அறிவு ஊட்டப்படுகின்றது. இதற்கான நிலையம் முன்பள்ளி என வகைப்படுத்தப்படுகின்றது.

எமது பிரதேசத்தில் இம்முறைமை மிகவும் அண்மைக் காலத்தில்தான் அறிமுகமானது. இருப்பினும் ஒப்பீட்டளவில் பாரதி முன்பள்ளி நீண்ட வரலாற்றைக் கொண்டது. பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பணியில் உள்ளனர். ஆனாலும் இதற்குச் சொந்தமான கட்டிடம் இல்லாதது ஒரு குறையாக இருந்தது. இக்குறையை நிறைவு செய்யும் வகையில் சமூகம் முன்வந்து விஸ்தீரணமான காணி பெற்றுக் கட்டிடம் கட்டி தலை நிமிர்ந்து நிற்க வகை செய்தமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

இந்த நிறுவனமான பாரதி முன்பள்ளியும் அதன் முதுகெலும்பான சமூகமும் மேலும் பலம் பெற்று பாரதி கண்ட சமுதாயமொன்றை கட்டி எழுப்ப வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

சி.இராமச்சந்திரா
பொருளாளர்
வழுக்கையாறு இந்து மயான அபிவிருத்தி சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி கல்வியின் வரலாற்று நோக்கு

இன்றைய தேசத்தின் நாளைய தலைவர்கள் சிறுவர்களே. நாளைய எமது தேசத்தின் தலைவிதி இன்றைய சிறுவர்களின் கைகளிலேயே உள்ளது. சிறுவர்களின் ஆரம்பக்கல்விப் பருவம் மிகவும் முக்கியமானதாகும். இதுவே அவனது வாழ்க்கையின் அத்திவாரம் இதனை பலமாக இடுவதன் மூலமே அவன் தனது எதிர்காலத்தை பிரகாசமாக்கிக்கொள்ள முடியும்.

இதனை உணர்ந்தே பல்வேறுபட்ட அறிஞர்கள் சிறுவர்கல்வி தொடர்பாக பல கருத்துக்களை முன்வைத்துள்ளனர். கிரேக்க நாட்டைச்சோர்ந்த சோக்கிரட்டீஸ் என்ற அறிஞர் கல்வி என்பது தொடர்பாக கூறுகையில் "தன்னைப் பற்றிய விளக்கத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான அறிவை வழங்கும் செயன்முறையே கல்வி" எனக்கூறியுள்ளார்.

அதேபோன்று சோக்கிரட்டீஸ் அறிஞரின் சீடரான பிளேட்டோ கல்வி தொடர்பாக கூறுகையில் "மனித வாழ்க்கையின் இலக்காக இருக்கவேண்டியது மெய்ப்பொருள் ஞானத்தை(Wisdam) பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகும்" என கூறியுள்ளார். இவரது கருத்துப்படி பெற்றோரே பிள்ளைக்கு முதல் ஆசிரியராக இருக்கவேண்டும் அதன் பின்னரே கல்வியை முன்னெடுக்கும் ஆசிரியர்கள் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் எனவும், பெறுப்புடன் இருக்கவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

குழந்தைக் கல்விச் சிந்தனையாளரான இத்தாலி நாட்டைச் சேர்ந்த பெண் மருத்துவரும் கல்வி உளவியலாளருமாகிய மரியா மொன்ரசூரி அம்மையார் கல்வி தொடர்பாக கூறுகையில் "உடல், உள மற்றும் ஆன்மீக ரீதியில் இயல்பாக நிகழ்கின்ற ஆளுமை வளர்ச்சியை ஒன்றிணைப்பதே கல்வியின் நோக்கமாகும்" என குறிப்பிடுகின்றார். தனியே அறிவைக் கடத்துதலுடன் மட்டும் கல்வியை வரையறுத்துக்கொள்ளலானது. எதிர்கால உலகிற்கு ஏற்றவகை பிள்ளையைத் தயார்செய்வதைக் கடினமானதாக்கும் என இவர் குறிப்பிடுகின்றார்.

1901ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையில் குழந்தைப் பராமரிப்பில் ஈடுபடும் பொதுநிறுவனங்களையும் தனியார்நிறுவனங்களையும் ஊக்குவிக்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1955 ஆம் ஆண்டு முதல் முதலாக டாக்டர் நைல்ஸ் இனால் யாழ் மத்திய கல்லூரியில் சிறுவர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு பின்னார் இதனை றிம்பர் மண்டபத்திற்கு மாற்றினார். இவ்வாறாக வடமாகணத்தில் சிறுவர் பாடசாலை தோற்றம் பெறதொடங்கியது.

1986 ஆம் ஆண்டு மூளாய் மாதர்சங்கத்தின் சிறுவர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இச் சிறுவர் பாடசாலை வலிமேற்கு பகுதியில் முன்பள்ளிகளுக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்ததுடன் பல்வேறு தரப்பினதும் கவனத்தையும் ஈர்த்து நின்றது. இதனை ஓர் எடுத்துக்காட்டாக கொண்டு இவ்வாறான முன்பள்ளிகள் தோற்றம் பெறுவதற்கு ஆரம்பமுன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு முன்பள்ளி ஆசிரியர்களிற்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இங்கு பயிற்சி பெற்ற பல ஆசிரியர்கள் பல்வேறுபட்ட கிராமங்களிலும் முன்பள்ளிகளை ஆரம்பித்து வினைத்திறனாக நடத்தினர்.

இதன் ஓர் அங்கமாகவே பாரதி முன்பள்ளியின் தோற்றமும் அமைந்தது மூளாய் சிறுவர் பயிற்சிப்பாடசாலையில் பயிற்சிபெற்ற ஆசிரியர்களே பாரதி முன்பள்ளியின் ஆரம்ப ஆசிரியர்களாக பரிணமித்தனர். இம் முன்பள்ளியின் அபரிதமான வளர்ச்சிக்கும் அதன் விருத்திக்கும் ஆசிரியர்களின் ஆளுமைத்திறனும் சமூகத்திற்கும் ஆசிரியர்களுக்கும் இடையிலான இடைநிலைத் தொடர்புமே காரணமாகும். இயற்கையும், கலையும், பண்பாடும் ஒருங்கே அமையப்பெற்ற ஓர் இடத்தில் இம் முன்பள்ளி அமையப்பெற்றிருப்பது இதன் சிறப்பம்சங்களாக. இயற்கை அறிவையும் கலையையும் ஒன்றிணைத்து போதிக்கப்படும் கல்வியே பிள்ளையின் ஆளுமை விருத்திக்கு உரமூட்டும் கல்வியாகும்.

இம் முன்பள்ளி என்றும் சமூகத்தில் நீடித்து நிலைத்திருப்பதற்கு ஆசிரியர்களின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்பும் சமூகத்தின் இடைநிலைத் தொடர்பும் என்றும் அமையவேண்டும்.

மூளாய்
I N S.G D இயக்குனரும்
நிர்வாகத்தினரும்.

*T.Phone : 021 225 0170/ 021 225 0815*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவரின்

# வாழ்த்துச் செய்தி

பாரதி கலை மன்றம் 1981 ஆம் ஆண்டில் சுழிபுரம் மேற்கில் வாழ்ந்து கொண்டிருந்த சில துடிப்பான இளைஞர்களால் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை மிகச்சிறப்பான முறையில் எமது கிராமத்து சிறுவர்களையும் இளைஞர்களையும் நல்வழிப்படுத்தும் வகையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. பாரதி கலை மன்றத்தினால் ஆரம்பபிக்கப்பட்ட பாரதி முன்பள்ளி அடுத்தடுத்து வந்த சிறந்த பல ஆசிரியைகளால் வழி நடாத்தப்பட்டு இன்று வலிகாமம் பகுதியியலேயே ஒரு முன்னோடியான முன்பள்ளியாக செயற்பட்டு வருகின்றது. தனியார் வீடுகளிலும் பாரதி கலை மன்றக் கட்டடத்திலும் பல காலங்களாக இயங்கி, தற்சமயம் சிறீ கணேசா கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருந்த இநத முன்பள்ளிக்கு சொந்தமான நிலம் கொள்வனவு செய்யப்பட்டு நவீனமயமான கட்டடம் அமைக்கப்பட்டு இன்று திறப்பு விழாவும் நடாத்தப்படுகின்றது.

பாரதி முன் பள்ளியில் ஆரமபக் கல்வியைப் பெற்ற எமது சிறார்கள் பலர் இன்று எமது வழிக்ரோறியாக்க கல்லூரியில் எல்லாத் துறைகளிலும் சிறப்புப் பெற்ற முன்னோடி மாணவர்களாகத் திகழ்கிறார்கள். இந்த முன்பள்ளியை இன்று சிறப்பான முறையில் இயக்கிக் கொண்டிருக்கும் ஆசிரியை எமது விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க நிர்வாக சபையின் உறுப்பினராக இருப்பதிலும் நாம் பெருமை கொள்கிறோம்.

இப்படியான சிறப்பு வாய்ந்த இந்த முன்பள்ளிக்கு சொந்தமான நிலக் கொள்வனவை செய்வதற்கு பண உதவி செய்தவர்களிற்கும் பல லட்சம் ரூபா செலவில் நவீன மயமான இக்கட்டிடத்தை அமைக்க பண உதவி செய்த குடும்பத்தினருக்கும் சிறந்த முறையில் இக்கட்டிடத்தை கட்டி முடிக்க அரும்பாடுபட்ட பாரதி கலைமன்ற நிர்வாகத்தினருக்கும் நன்றி தெரிவிக்க நாம் கடமைப்பட்டுள்ளளோம்.

இந்த முன்பள்ளி மேலும் சிறப்பாக செயற்பட்டு இன்னும் பல சிறந்த மாணவர்களை ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலைக்கு அனுப்பி அங்கிருந்து எமது விக்டோறிகாக் கல்லூரிக்கு அறிமுகப்படுத்த எல்லாம் வல்ல கதிர்வேலாயுத சுவாமிகள் அருள் புரிய வேண்டுமென வேண்டி எமது நல்லாசிகளையும் தெரியப்படுத்துகின்றோம்.

**வாழ்க பாரதி கலை மன்றம்!**
**வளர்க பாரதி முன்பள்ளியின் பணிகள்!**
**ஓங்குக விக்ரோறியா அன்னையின் புகழ்!**

நன்றி

வி. உமாபதி J.P.
தலைவர், பழைய மாணவர் சங்கம்,
விக்ரோறியாக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு மாணவியின் தந்தையின்
# வாழ்த்துச் செய்தி

உலகத்தை இன்று ஒரு சிறிய கணணி மூலம் அறியக் கூடிய இன்றைய தகவல் யுகத்தில் கல்வி என்பது மிக முக்கிய ஒன்றாக மாறிவிட்டது.

அந்த வகையில் எம்முன்னோர் கூறியது போன்று எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்ற கருப்பொருளில் எமது சிறார்களின் முதலாவது கற்கை இடமாக இன்று முன் பள்ளிகள் மாறிவிட்டன.

இவ் வகையில் எமது கிராமமான சுழிபுரம் மேற்கில் அமைந்துள்ள பாரதி முன்பள்ளியானது முதல் நிலையில் சிறார்களை சிறந்த முறையில் அவர்களின் எழுத்துப் பயிற்சி, உடல் இயக்க செயற்பாடுகள், இயல் இசை செயற்பாடுகள் என்பவற்றில் மேம்படுத்துகிறது.

மேலும் இங்குள்ள முதல்நிலை ஆசிரியர்கள் திருமதி. பரநிருபசிங்கம் கிருஷ்ணவேணி, திருமதி செந்தில்குமார் பிறேமகௌரிஆகியோர் சிறார்களைத் தம் பிள்ளைகளைப்போல் அன்போடும் அக்கறையுடனும் இந்த யுகத்திற்கு ஏற்றாற்போல் வழிப்படுத்தி வருவது சிறார்களின் சகல செயற்பாடுகளின் மூலமுமாகும், இதனை எனது மகளை இம் முன்பள்ளியில் சேர்த்து கற்றலில் ஈடுபடுத்துவதால் நேரடியாக நானும் அறியக்கூடியதாக இருக்கிறது.

இவர்களது செயற்பாடுகளில் சில விடயங்களைப் பெரிய ஒரு பாடசாலையில் அதிபர் என்ற வகையில் நானும் எனது பாடசாலையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நினைக்கத் தூண்டுகின்றது.

எனவே இம் முன்பள்ளியின் சகல செயற்பாடுகளும் மிகச்சிறப்பாக அமைந்திருப்பதைப் போன்று, மேலும் இவர்கள் வருங்காலத்தில் தமது செயற்பாடுகள் மூலம் எமது பிரதேச சிறார்களையும் வளப்படுத்தி தாமும் வளம்பெற வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

திரு.ந.சூரியகுமார்,
அதிபர்,
யா/சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *பாரதி கலைமன்ற*

# செயலாளரின் உள்ளத்திலிருந்து

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" "பருவத்தே பயிர் செய்" எனும் வாக்கிற்கிணங்க எமது சுழிபுரம் மேற்கு கிராமத்தில் 1982ஆம் ஆண்டு வைகாசி மாதம் 24ஆம் திகதி பாரதி முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. முன்பள்ளிக் கற்கைச் செயற்பாடுகளுக்காக எம் கிராமத்திலுள்ள அனைத்து பாலகர்களும் தூர இடங்களிற்கு சென்று வருவது கடினமானது. இதனைக் கருத்திற் கொண்டு அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்து வந்த பெரியவர்களின் உதவியுடன் இந்த முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. ஒரு பிள்ளையின் எதிர்காலம் ஒரு முன் பள்ளியில்தான் ஆரம்பிக்கப்பட்டு வைக்கப்படுகின்றது. மாதா பிதா குரு தெய்வம் என்பதற்கேற்ப, மாதா பிதாவைக் காட்டுகிறார். பிதா குருவைக் காட்டுகிறார். குரு தெய்வத்தைக் காட்டுகிறார். ஒரு பாலகனுக்கு குரு சரியாக அமையும்போது அவனது வாழ்வு பெற்றோரின் உதவியுடன் மேன்மையடைகிறது. அந்த வகையில் எமது பாரதி முன்பள்ளி ஆரம்பித்த காலத்திலிருந்து "செய்வன துணிந்து செய்வோம்" என்ற தனது மகுட வாசகத்திற்கிணங்க செய்வன துணிந்து செய்து வருகின்றது.

இதுவரை பாரதி கலைமன்ற கட்டடத்தில் தனது சேவையை செய்து வந்த பாரதி முன்பள்ளியானது இடப்பற்றாக்குறை காரணமாக தனது சேவையை புதிய கட்டத்தில் ஆரம்பிக்க உள்ளது. இது எமது ஊருக்கு பெருமை தந்துள்ளது. இந்த முன்பள்ளி மூலம் கற்று பெரிய நிலையில் உள்ளவர்கள் எல்லோரும் மறக்காத காலம் எப்போதும் இந்த முன்பள்ளிக்காலம்தான். முன்பு அயற்கிராமத்தில் கல்வி கற்கச் சென்ற எமது கிராமத்து மாணவர்கள் இப்போது எமது கிராமத்திலேயே இலகுவாகக் கல்வி கற்றுக் கொள்ள இப்பாரதி முன்பள்ளி தனது சேவையை நடாத்துகின்றது. ஏனைய கிராமத்தவர்கள் கூட நான் இந்த பாரதி முன் பள்ளியில் கல்வியை தொடங்கினேன் என்று கூறுவது எமது முன்பள்ளி சமூகத்திற்கு கிடைத்த பெருமையாகும். பாரதி முன் பள்ளி தன் சேவையை மென்மேலும் சிறப்புற செய்து வரும் என்பதில் யாருக்கும் ஐயமில்லை

திருமதி. ரு. தயாளினி<br>கௌரவ செயலாளர், பாரதி கலை மன்றம்<br>சுழிபுரம் மேற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| திகதி | செலவு விபரம் | செலவு |
|---|---|---|
| 02.11.2009 | சிற்றுண்டி | 465.00 |
| 02.11.2009 | வளவு அளந்தது | 5,000.00 |
| 23.11.2009 | வளவு வேண்டியது | 750,000.00 |
| 23.11.2009 | வளவு எழுதிய கூலி | 45,000.00 |
| 01.12.2009 | விறகு வளவில் வெட்டியது | 4,500.00 |
| 04.12.2009 | 5 இறாத்தல் பாண் | 230.00 |
| 04.01.2010 | முத்திரை | 34.00 |
| 17.02.2010 | வெள்ளை தாள் | 40.00 |
| 22.02.2010 | பிரதேச சபை வரி | 367.00 |
| 25.02.2010 | சாத்திரி நிலம் பார்த்தது | 500.00 |
| 04.03.2010 | சுதா தொலை பேசி | 35.00 |
| 11.03.2010 | 1 சோடா | 30.00 |
| 11.03.2010 | சாத்திரி நிலம் பார்த்தது | 200.00 |
| 31.03.2010 | விநாயகர் போட்டோ பிரதி | 199.00 |
| 14.04.2010 | P.H.I க்கு படம் வரைந்த கூலி | 3,500.00 |
| 04.05.2010 | 1 வரல் 1 கொப்பி | 815.00 |
| 14.05.2010 | பைப் வேண்டியது | 3,200.00 |
| 15.05.2010 | அத்திவார நீர் இறைத்தது | 300.00 |
| 04.05.2010 | மதில் (மேற்கு புறமுன் மதில்) | 161,000.00 |
| 04.05.2010 | மதில் (தெற்கு புற மதில்) | 90,000.00 |
| 11.05.2010 | தேநீர் செலவு | 585.00 |
| 28.05.2010 | தொலைபேசி (பிரான்ஸ் கனடா) | 90.00 |
| 07.06.2010 | றோட் கரை மரம் கிளறியது | 500.00 |
| 16.06.2010 | நைலோன் கயிறு | 450.00 |
| 26.06.2010 | 40 கம்பி 14" | 2,800.00 |
| 01.07.2010 | வளவு துப்பரவு | 3,140.00 |
| 21.07.2010 | வேலி அடைத்தது | 2,000.00 |
| 22.07.2010 | விறகு கொத்தியது | 1,200.00 |
| 12.08.2010 | கட்டட விண்ணப்ப படிவம் | 118.00 |
| 23.08.2010 | கட்டட திட்டம் எடுத்தது | 7,000.00 |
| 26.08.2010 | கட்டட வரி | 345.00 |
| 16.10.2010 | மண் பரவியது | 3,300.00 |
| 09.03.2011 | வளவில் புல் செருக்கியது | 3,340.00 |
| 13.08.2011 | கேற் செய்த கூலி | 45,000.00 |
| 13.08.2011 | முன்மதில் | 63,000.00 |
| 04.05.2010 | மண் செலவு | 443,500.00 |
| | மதில் (மேற்கு புற பின் மதில்) | 95,000.00 |
| | நீர் விநியோகம் - மின்சாரம் | 255,000.00 |
| | இராட்டினம் | 45,000.00 |
| | சீசோ | 40,000.00 |
| | நீர்த்தாங்கி மின்சாரம் | 255,000.00 |
| | **மொத்தம்** | 2.331.783.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவுகள்

| திகதி | பெயர்கள் | முகவரி | வரவு |
|---|---|---|---|
| 25.06.2009 | நா.சுப்பையா குடும்பம் | பிரான்ஸ் | 500,000.00 |
| 31.05.2011 | சி.ரவிசங்கர் | லண்டன் | 255,000.00 |
| 23.11.2009 | கு.மகாலிங்கம் குடும்பம் | பிரான்ஸ் | 230,000.00 |
| 23.11.2009 | அ.சிவநேசன் | சுவீடன் | 200,000.00 |
| 23.11.2009 | பெ.சண்முகநாதன் | பிரான்ஸ் | 100,000.00 |
| 31.05.2011 | க.கோபிதா | லண்டன் | 95,000.00 |
| 18.08.2011 | சி.ரவிசங்கர் | லண்டன் | 80,000.00 |
| 04.11.2013 | மு.ஏ. நடராஜா | நீர்வேலி | 65,000.00 |
| 04.11.2013 | இ. அன்னபூரணம் (இ.இளரூபன்) | லண்டன் | 65,000.00 |
| 23.11.2009 | வை.பொன்னையா குடும்பம் | பிரான்ஸ் | 50,000.00 |
| 04.11.2013 | கு. சின்னத்தம்பி குடும்பம் | லண்டன் | 50,000.00 |
| 04.11.2013 | செ.நகுலாதேவி | சுவிஸ் | 50,000.00 |
| 04.11.2013 | வ.வசந்தகுமார் | அமெரிக்கா | 50,000.00 |
| 04.11.2013 | சி.கங்காதரன் | பிரான்ஸ் | 45,000.00 |
| 04.11.2013 | ப.தங்கேஸ்வரி | பிரான்ஸ் | 35,000.00 |
| 19.07.2010 | சீ.சிவஞானரத்தினம் | பிரான்ஸ் | 30,000.00 |
| 10.05.2010 | தி.செந்தில்நாதன் | சுழிபுரம் மேற்கு | 30,000.00 |
| 04.11.2013 | பெ.விஸ்வநாதன் | பிரான்ஸ் | 30,000.00 |
| 18.08.2011 | ந.சாந்தினி | பிரான்ஸ் | 25,000.00 |
| 04.11.2013 | சி.ஏரம்பமூர்த்தி | கனடா | 25,000.00 |
| 13.03.2011 | ஜெ.ஜெயராஜன் | பிரான்ஸ் | 17,800.00 |
| 03.04.2011 | சி.சிவபாதம் | பிரான்ஸ் | 15,800.00 |
| 13.03.2011 | ஜெ.நித்தியசுதன் | பிரான்ஸ் | 15,300.00 |
| 04.11.2013 | இ.இளங்கோ | பிரான்ஸ் | 15,000.00 |
| 31.05.2010 | ச.பாமினி | பிரான்ஸ் | 14,949.49 |
| 31.05.2010 | ர.சறோஜினி | பிரான்ஸ் | 13,468.00 |
| 31.05.2010 | க.செல்வரட்ணம் | பிரான்ஸ் | 13,468.00 |
| 31.05.2010 | சீ.ரமணி | பிரான்ஸ் | 13,468.00 |
| 31.05.2010 | வி.வேதவனம் | பிரான்ஸ் | 13,468.00 |
| 13.04.2010 | க.கதிர்காமநாதன் | கனடா | 10,000.00 |
| 17.05.2010 | ச.ஜெயச்செல்வி | பிரான்ஸ் | 10,000.00 |
| 09.08.2010 | ச.பாலகிருஸ்ணன் | யேர்மன் | 10,000.00 |
| 28.05.2010 | பொ.வைத்திலிங்கம் | லண்டன் | 10,000.00 |
| 20.06.2010 | வே.புனிதவதி | அமெரிக்கா | 10,000.00 |
| 01.02.2011 | ம.தவபாக்கியம் | பிரான்ஸ் | 10,000.00 |
| 13.11.2013 | சி.துரைசிங்கம் குடும்பம் | சுழிபுரம் மேற்கு | 10,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| திகதி | பெயர்கள் | முகவரி | வரவு |
|---|---|---|---|
| 13.11.2013 | வி. உமாபதி | சுழிபுரம் மேற்கு | 10,000.00 |
| 18.08.2011 | விறகு விற்றது | | 9,500.00 |
| 28.07.2010 | க.சிறீதரன் | பிரான்ஸ் | 7,275.00 |
| 01.02.2011 | மு.இரத்தினசபாபதி | பிரான்ஸ் | 7,000.00 |
| 31.05.2010 | நி.காயத்திரி | பிரான்ஸ் | 6,734.00 |
| 31.05.2010 | மு.புவனேஸ்வரி | பிரான்ஸ் | 6,734.00 |
| 31.05.2010 | அ.டிலீப் | பிரான்ஸ் | 6,734.00 |
| 31.05.2010 | ச.சந்திரன் | பிரான்ஸ் | 6,734.00 |
| 31.05.2010 | ஜெ.சூரியகலா | பிரான்ஸ் | 6,734.00 |
| 28.05.2010 | இ.தயாழினி | பிரான்ஸ் | 5,000.00 |
| 06.03.2010 | கா.அரிச்சந்திரா | சுழிபுரம் மேற்கு | 5,000.00 |
| 02.03.2010 | கோ.அருட்குமார் | சுழிபுரம் மேற்கு | 5,000.00 |
| 06.03.2010 | வை.கைலைநாதன் | சுழிபுரம் மத்தி | 5,000.00 |
| 10.05.2010 | வீ.கனகம்மா | சுழிபுரம் மத்தி | 5,000.00 |
| 10.05.2010 | ச.இராசவல்லவர் | சுழிபுரம் மத்தி | 5,000.00 |
| 06.03.2010 | அ.சந்திரகுமார் | சுழிபுரம் மேற்கு | 5,000.00 |
| 23.06.2010 | ச.சிவகுமார் | சுழிபுரம் மேற்கு | 5,000.00 |
| 10.05.2010 | வி.ரமணன் | சுழிபுரம் மேற்கு | 5,000.00 |
| 11.05.2010 | அ.சந்திரகுமார் | சுழிபுரம் மேற்கு | 5,000.00 |
| 14.06.2010 | ப.மகேந்திரா | சுழிபுரம் மேற்கு | 5,000.00 |
| 13.04.2010 | க.பாபு | சுழிபுரம் மேற்கு | 5,000.00 |
| 31.05.2010 | ந.மாலினி | பிரான்ஸ் | 3,367.00 |
| 31.05.2010 | ச.குமுதினி | பிரான்ஸ் | 3,367.00 |
| 14.11.2013 | மயில்வாகனம் முரளி யசோ | சுழிபுரம் மேற்கு | 3,000.00 |
| 31.05.2010 | ர.மதன் | பிரான்ஸ் | 2,693.60 |
| 31.05.2010 | ர.மகிந்தன் | பிரான்ஸ் | 2,693.60 |
| 31.05.2010 | த.மோகன் | பிரான்ஸ் | 2,693.60 |
| 31.05.2010 | ஜெ.அற்புதநாதன் | பிரான்ஸ் | 2,693.60 |
| 20.02.2011 | ம.குகனேஸ்வரி | சுழிபுரம் மேற்கு | 2,000.00 |
| 29.05.2010 | ப.வேலாயுதம் | சுழிபுரம் மேற்கு | 2,000.00 |
| 28.05.2010 | சா.ஞானசேகரன் | சுழிபுரம் மத்தி | 2,000.00 |
| 10.05.2010 | இ.நந்தகுமார் | சுழிபுரம் மத்தி | 2,000.00 |
| 10.05.2010 | இ.ஜீவகுமார் | சுழிபுரம் மத்தி | 2,000.00 |
| 19.06.2010 | இ.சிவராம் | சுழிபுரம் மேற்கு | 2,000.00 |
| 06.03.2010 | நா.செல்லநாச்சியார் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 06.03.2010 | ப.சிறிதரன் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 06.03.2010 | பா.சிந்துஜா | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


| திகதி | பெயர்கள் | முகவரி | வரவு |
|---|---|---|---|
| 28.05.2010 | வி.சிவராமன் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 31.05.2010 | சி.சிவரங்கன் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 31.05.2010 | சி.தனபாலசிங்கம் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 31.05.2010 | சு.கனகே' ணம் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 20.02.2011 | இ.மாணிக்கவாசகம் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 20.02.2011 | ந.யோகநாதன் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 06.03.2010 | த.ஞானலிங்கமூர்த்தி | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 28.05.2010 | ச.கணபதிப்பிள்ளை | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 28.05.2010 | பொ.சோமசுந்தரம் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 08.03.2010 | இ.இராசையா | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 28.05.2010 | பொ.முருகானந்தன் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 30.05.2010 | வி.சுரேந்திரன் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 03.03.2010 | சி.பரமு | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 06.03.2010 | க.கிஸ்ணகுமார் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 06.03.2010 | பொ.தவராசா | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 06.03.2010 | மு.வேலாயுதம் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 06.03.2010 | லி.கலையரசி | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 06.03.2010 | சி.கிஸ்ணவேணி | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 23.08.2010 | ஜெ.ஜெனகன் | சுழிபுரம் மத்தி | 1,000.00 |
| 10.05.2010 | கா.நாகலிங்கம் | சுழிபுரம் மத்தி | 1,000.00 |
| 10.05.2010 | பொ.கார்த்திகேசு | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 10.05.2010 | அ.அஜித்குமார் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 23.06.2010 | க.வைத்திலிங்கம் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 23.06.2010 | சி.சிவராசா | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 05.11.2013 | திருமதி.செ.புஸ்பராணி | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 05.11.2013 | திரு.ஜெ.பிரதீபன் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 05.11.2013 | திருமதி.ப.கிருஸ்ணவேணி | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 05.11.2013 | திரு.இ.சதானந்தநாதன் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 05.11.2013 | திரு.மு.கெளரிகாந்தன் | சுழிபுரம் மேற்கு | 1,000.00 |
| 05.11.2013 | திரு.பா.விஜயகுமார் | சுழிபுரம் மத்தி | 1,000.00 |
| 06.03.2010 | செ.கனகரத்தினம் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 06.03.2010 | க.கணபதிப்பிள்ளை | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 06.03.2010 | பா.திவிசியா | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 31.05.2010 | து.ஜெயானந்தன் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 07.07.2010 | கோ.சிவகுமார் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 06.03.2010 | அ.செந்தில்நாதன் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 06.03.2010 | கி.நாகம்மா | சுழிபுரம் மேற்கு | 500.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| திகதி | பெயர்கள் | முகவரி | வரவு |
| --- | --- | --- | --- |
| 20.02.2011 | க.வரதராசா | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 06.03.2010 | வே.ஜெயலலிதா | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 08.03.2010 | க.வரதராசா | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 08.03.2010 | சி.ஒற்றிரோன் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 29.05.2010 | ந.சூரியகுமார் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 29.05.2010 | க.பொன்னம்பலம் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 06.03.2010 | சி.மகேந்திரராசன் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 06.03.2010 | ஜெ.தயாளசீலன் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 06.03.2010 | வே.கதிர்காமத்தம்பி | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 08.03.2010 | சீ.ஜெகதீஸ்வரன் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 07.06.2010 | க.மணிவண்ணன் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 01.06.2010 | நா.முருகர் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 28.05.2010 | நா.இராசகுமார் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 28.05.2010 | ச.காசுபதி | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 30.05.2010 | ந.நாகேந்திரம் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 06.03.2010 | ந.நவரூபன் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 06.03.2010 | த.செல்வராணி | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 06.03.2010 | இ.சத்திகா | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 06.03.2010 | இ.நடராசா | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 28.05.2010 | கா.ஸ்ரீபாலச்சந்திரன் | சுழிபுரம் மத்தி | 500.00 |
| 10.05.2010 | சி.சிவகுமார் | சுழிபுரம் மத்தி | 500.00 |
| 10.05.2010 | கா.ஜெயபாலன் | சுழிபுரம் மத்தி | 500.00 |
| 08.03.2010 | த.உதயகுமார் | சுழிபுரம் மேற்கு | 500.00 |
| 06.03.2010 | சி.சிவஞானமலர் | சுழிபுரம் மேற்கு | 300.00 |
| 11.05.2010 | ஞா.யதுசிகன் | சுழிபுரம் மேற்கு | 300.00 |
| 06.03.2010 | சி.பத்மலோசினி | சுழிபுரம் மேற்கு | 250.00 |
| 07.06.2010 | சி.இரத்தினாம்பிகை | சுழிபுரம் மேற்கு | 250.00 |
| 28.05.2010 | சு.அகிலா | சுழிபுரம் மேற்கு | 250.00 |
| 18.08.2011 | கதியால் விற்றது | | 240.00 |
| 31.05.2010 | சி.கணபதிப்பிள்ளை | சுழிபுரம் மேற்கு | 200.00 |
| 28.05.2010 | க.ரவிச்சந்திரன் | சுழிபுரம் மேற்கு | 200.00 |
| 28.05.2010 | பொ.ஸ்ரீலோகநாதன் | சுழிபுரம் மத்தி | 200.00 |
| 06.03.2010 | மு.சேதுநாயகம் | சுழிபுரம் மேற்கு | 100.00 |
| 07.07.2010 | சி.சிவசண்முகநாதன் | சுழிபுரம் மேற்கு | 100.00 |
| 06.03.2010 | சு.பிரணவன் | சுழிபுரம் மேற்கு | 100.00 |
| 28.05.2010 | செ.குணரட்ணம் | சுழிபுரம் மேற்கு | 100.00 |
| 06.03.2010 | க.சிற்றம்பலம் | சுழிபுரம் மேற்கு | 100.00 |
| | மொத்தம் | | **2,423,364.89** |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழிபுரம் பாரதி முன்பள்ளி புதிய வரைபடம்




## திரு. சிவசுப்பிரமணியம் இரவிசங்கர்
## அவர்களின் அன்பளிப்பு

| | | |
|---|---|---|
| 1. | மின்சார விநியோகம்/ நீர் விநியோகம் | 255 000/- |
| 2. | 131' நீள மதில் | 170 300/- |
| 3. | முன்பள்ளிக் கட்டடம், நல்ல மலசல கூடம் | 3 030 000/- |
| 4. | கணனிகள்,மேல் நிலை ஒளிப்படக் காட்டி | 190 000/= |
| 5. | கற்பித்தல் உபகரணங்களும் விளையாட்டு உபகரணங்களும் | 180 000/= |
| | | 3 825 300/= |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதி முன்பள்ளி கட்டிட நிர்மாணிப்பு குழு

தலைவர்: திருமதி.சுதாகரன் ஜெயரஞ்சனி

செயலாளர் : திருமதி பரநிருபசிங்கம்.கிருஷ்ணவேணி

பொருளாளர்: திருமதி சுந்தரமூர்த்தி கனகாம்பாள்

உறுப்பினர்கள்:-

1. திரு சி. துரைசிங்கம்
2. திரு.பெ.முருகேசம்பிள்ளை
3. திருமதி.சி.புனிதவதி
4. திரு.இ.இராசையா
5. திரு.பொ.குகானந்தன்
6. திரு.து.இரவீந்திரன்
7. திரு.க.பாபு
8. திருமதி.பி.தமயந்தி

வங்கி க/கு விபரம் BHARATHY PRESCHOOL
BANK OF CEYLON A/C No: 71743546

இணையதள முகவரி : www.bharathy.info

மலர் வடிவமைப்பில் உதவி-:-

1. திரு.க. குகப்பிரியன்
2. கலாநிதி .செ.கண்ணதாசன்
3. திரு.நா.இரமேஸ்வரன்
4. திரு.பா.விஜயகுமார்
5. திரு.க.கோனாத்

**சேவையாற்றிய ஆசிரியைகள்.................**

1985 - 1986 செல்வி. கணபதிப்பிள்ளை (குச்சவெளி, திருகோணமலை)
1986 - 1987 திருமதி.கு.விஜயலட்சுமி (திருகோணமலை)
1987 - 1988 செல்வி நடராஜா நகுலகுமாரி
1988 - 1990 செல்வி வே.ஜெயலலிதா, செல்வி.வே.கிருஷ்ணவேணி, செல்வி.வே.கிருஷ்ணமாலா, திருமதி.சுதாகரன் ஜெயரஞ்சனி
1991 - 1998 செல்வி.கி.இராஜகீதம், செல்வி.சி.பரமேஸ்வரி
1998 தொடக்கம் திருமதி ப.கிருஷ்ணவேணி
2000 தொடக்கம் திருமதி செ. பிறேமகௌரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்குழு உறுப்பினர்கள்:-

தலைவர்:- திரு.சோ.சரவணன்
செயலாளர்: செல்வி.சு.துஷியந்தினி
பொருளாளர்: திரு.த.விமல்
உறுப்பினர்கள்:

திரு.வ.மகேஸ்வரன். திரு.இ.சிவராம்
திரு.சி.கிருஷ்ணாகரன் திரு.பா.தேவகுமார்
திரு.இ.சிவனேசன் திரு.வை.சுரேந்திரன்
திரு.வி.செந்தூரன் செல்வன்.கு. விங்கநேசன்
திருமதி.ரு.தயாளினி திருமதி.பி.தமயந்தி
திருமதி.ப.கிருஷ்ணவேணி செல்வி சி.தனுஷா
செல்வி த.திவ்யா செல்வி சி.கஸ்தூரி

## பாரதி முன்பள்ளி முகாமைத்துவக் குழு

தலைவர்:- திரு.து.இரவீந்திரன்
செயலாளர்:- திருமதி. ரூ.தயாளினி
பொருளாளர்:- திரு.தி.சிவசண்முகநாதன்
நிர்வாக உறுப்பினர்

1. திரு.ம.இரத்தினவடிவேல்
2. திருமதி.சு.ஜெகதீஸ்வரி
3. திருமதி.யோ.லிங்கேஸ்வரிதேவி

***கட்டிட வரைபடம் கௌரவ அனுசரணை:*** எந்திரி. திரு.ந.சுதாகரன் அவர்கள்
பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்
கிளிநொச்சி.

கட்டிட நிர்மாணிப்பு: திரு க.மணிவண்ணன் குழுவினர், சுழிபுரம்
கூரை வடிவமைப்பு: திரு.ந.கணேஸ், கட்டுடை
தச்சு வேலை: திரு.கோ.சபாரத்தினம், திரு. .ஆனந்தராஜா
வணைப்பூச்சு வேலை: திரு.வை.பாஸ்கரன்

அலுமினிய பொருத்துவேலை: திரு.இ .லவன்
(கஜானன் தொழிற்சாலை, சங்கானை)
மின்னிணைப்பு, நீர்க்குழாய் இணைப்பு: திரு.கு.பாபு
கேற், கதவு : ........................................................
கிணறு, சுற்று மதில்: திரு சிவா + புத்திரர்கள்
நீர்த்தாங்கி: திரு. . தேவன்.
வெளிப்புற வேலை: திரு.செ.அருமைராசன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ATTORNEY-AT-LAW & NOTARY PUBLIC
COMMISSIONER FOR OATHS
"Thulasi"
Anaicoddai

ச.585/57.

True Copy

M. THIYAGARAJAH, B.A.
Attorney-at-Law &
Notary Public
Commissioner for Oaths

சாதனம் : அறுதி.

ரூபா : 750,000/-

காணி : ஒன்று (01)

இல:1 1 4 1 7/23.11.2009.

இத்தாற் சகலருமறிக யாழ்ப்பாணம் சுழிபுரம் மேற்கு தற்போது 6119 ரைன்புறி வீதி 1160532 ஐக்கிய அமெரிக்காவில் வதியும் வடிவேலு வசந்தகுமாரன் (தே.அ.அ.இல.670811336வி) ஆகிய நான் எனது தத்துவகாரன் சங்குவேலி தெற்கு மானிப்பாய் சின்னத்தம்பி திருநாவுக்கரசு மூலம் பாரதி கலைமன்ற பாரதி முன்பள்ளியின் நடப்பாண்டின் செயற்குழுவினால் குறித்த மன்றின் நலன் விரும்பிகளிடமிருந்து சேகரித்த நிதியை வெளிப்படுத்தி இன்று தரப்பெற்றுக்கொண்ட தொகை ரூபா ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் (ரூபா 750,000/=) இந்த ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரமே கிரயமாக ---
இதன் பின் காணும் ஆதனடாப்பில் நன்கு விபரிக்கப்படும் ஆதன த்தை யும் அ தற் குச் சேர்ந்தவைகளையும் குறித்த பாரதி கலைமன்ற பாரதி முன்பள்ளிக்கு ----

இதனால் அறுதி விற்று ---- ஆட்சியையும் ஒப்படைக்கின்றேன்.

ஆகையால் இவ ர்களும் இவ ர்களி ன் ~~உரித்தாளர்-மரணசாதன தத்துவகாரர்- உரிமைத் தத்துவக்காரர்- சாட்டுதல்காரரும்~~ பின் பாரதி கலைமன்ற பாரதி முன்பள்ளியின் ~~தங்கள் சொந்த~~ செயற்குழுவினர் குறித்த மன்றின் ஆத னமா க ஆண்டனுபவிப்பார்களாக.

இவ்வாதன ம் இவ்விதம் அறுதி விற் ---- க்கப் போதிய உரித்துந் தத்துவமுண்டென்றும் இவ்வாதனம் --- யாதேனும் வகையாய்ப் பாரிக்கப்பட்டு அல்லது பராதீனப்படுத்தப்பட்டும் இருக்கவில்லை என்றும் குறித்த நிறுவனத்திற்கு ------ க்கு இவ்வாதனத்தை என்றென்றைக்கும் தற்காத்துக் கொடுப்பே ன் என்றும் வெளிப்படுத்தி இந்த அறுதி உறுதி முடித்துக் கொடுத்தே ன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தாற் சகலருமறிக யாழ்ப்பாணம் சுழிபுரம்

மேற்கு தற்போது 6119 ரொஸ்புறி வீதி 1160532 ஐக்கிய அமெரிக்காவில் வதியும் வடிவேலு வசந்தமோகன் (தே.அ.அ.இல.670811336வி) ஆகிய நான் எனது தத்துவகாரன் சங்குவேலி தெற்கு மானிப்பாய் சின்னத்தம்பி திருநாவுக்கரசு மூலம் பாரதி கலைமன்ற பாரதி முன்பள்ளியின் நடப்பாண்டின் செயற்குழுவினால் குறித்த மன்றின் நலன் விரும்பிகளிடமிருந்து சேகரித்த நிதியென வெளிப்படுத்தி இன்று தரப்பற்றிக்கொண்ட தொகை ரூபா எழு இலட்சத்து ஐம்பதினாயிரம் (ரூபா 750,000/=) இந்த எழு இலட்சத்து ஐம்பதினாயிரமே கிரயமாக ----

இதன் பின் காணும் ஆதனடாப்பில் நனகு விபாககப்படும் ஆதன த்தை யும்

அ தற் குச் சேர்ந்தவைகளையும் குறிதத


பாரதி கலைமன்ற பாரதி முன்பள்ளிக்கு ----



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**K.PARAMESHWARAN**
Licensed Surveyor &Leveller
354,Palaly Road
Jaffna

**PLAN No:43/2009**




**Reference**
LF : Live Fence
My.Wall : Masonry Wall
W : Wall
BS : Boundary Stone
U : Undefined

SCALE 1:500

PLAN

OF ONE(1) LOT OF LAND CALLED

PANDAVUDAI

Bearing Assmt. No. Periyathampiran Kovil lane, Ward No.6,
within the Pradeshiya Sabha Limits of Chulipuram

BOUNDED AS ABOVE AND SITUATED AT

VILLAGE : CHULIPURAM WEST　　DISTRICT : JAFFNA

D.S. DIVISION : VALIKAMAM WEST　　PROVINCE : NORTHERN

| Lot No: | Lachchams & Kulies | | Hectare | sq. m | Remarks |
|---|---|---|---|---|---|
| 1 | 5 | 00.00 | 0.1286 | 1285.65 | |
| Total | 5 | 00.00 | 0.1286 | 1285.65 | Five lachchams (V.C) & zero decimal zero zero kulies |

Surveyed on 2009-10-31
Demarcated on2009-11-05

*K.Parameshwaran*
*Licensed Surveyor & Leveller*
*Regd.No.19741613*
2009-11-12

K.Parameshwaran
Licensed Surveyor & Leveller



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் பயன்படுத்தும் பல கருவிகளில் வியப்பூட்டுவது ஐயத்திற்கிடமின்றிப் புத்தகம் என்றே கூறலாம். ஆம். நினைவாற்றல், கற்பனை என்பவற்றின் விரிவாக்கமே அதுவாகும்.

உலகம் என்ன நினைக்கும்? என்று எண்ணுவீர்களாயின் நிச்சயம் நீங்கள் தாழ்வு மனப்பான்மைக்கு அடி கோலியவராவீர்கள். மனச்சாட்சிக்கு எது சரியோ அதனை நீங்கள் செய்வதில் தயங்கக் கூடாது.

நீங்கள் இறந்தவுடன் மக்கள் உங்களை மறந்து விடக்கூடாது என்று எண்ணுகிறீர்களா? ஆம் அப்படியானால் மக்கள் விரும்பி படிப்பதற்கு நல்ல புத்தகங்களை எழுதுங்கள். அல்லது நல்ல சேவைகளைச் செய்யுங்கள் நிலைத்து நிற்பீர்கள் மனதில்

இனம்: தனித்துவங்களைக் கொண்டது அர்த்தமுடன் பாதுகாக்கப்படாவிட்டால் அழிந்துவிடக்கூடியது.

வாழ்க்கை: உணவும் உடையும் போகமும் அல்ல உரிமையும் கடமையும் பொறுப்புமாகும்.

கல்வி: சுயநலத்தால் ஓடித்தப்புவதற்கு அல்ல சமூகத்தைத் தேடி நல்வழிப்படுத்துவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எனது சமாச்சாரம்

பெயர் ...... செல்வன் விநாயகமூர்த்தி - செந்தூரன்

பாடசாலை ...... பாரதி சிறுவர் பாடசாலை

INSTITUTE OF NURSERY STUDIES
Moolai, Chulipuram.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எனது பெயர் : ........................................ பால் : ..........

வசிக்கும் விலாசம் : ........................................................

நிரந்தர விலாசம் : ........................................................

பிறந்த திகதி : ...1981 . 07 . 24....... நேரம் : ......7.00 மணி

எனது மொழி : ........................ எனது சமயம் : ........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா பெயர் : திரு. க. கிருபாகமூர்த்தி

தொழில் : கமம்

அம்மா பெயர் : திருமதி. கி. புஷ்பமலர்

தொழில் : (–)

என்னுடன் பிறந்தவர்கள் : இரு மூத்த சகோதரர்

நான் விரும்பியவர் : ....................

பாடசாலையின் பெயர் : பாரதி சிறுவர் பாடசாலை
சுழிபுரம் - மேற்கு.

ஆசிரியரின் பெயர் : செல்வி திருமதி. இ. ஜெயரஞ்சனி திரு. கிராமசேகரம்

உடைத்தும் நிறுவனம் / சங்கம் : பாரதி கலைமன்றம்
சுழிபுரம் மேற்கு

கிராமசேவகர் பிரிவு : சுழிபுரம் - மேற்கு J/172

உதவி அரசாங்க அதிபர் பிரிவு : வலி. மேற்கு சங்கானை

மாவட்டம் : யாழ்ப்பாணம்

நான் பங்குபற்றிய

விளையாட்டு விழா 1993 வருடாந்த விளையாட்டுப்போட்டி
~~1993இல் நடைபெற்ற [illegible]~~ - விளையாட்டுப்போட்டி

கலை விழா கலைவிழாவில் பங்குபற்றவில்லை

மற்றவை மாணிக்கம், [illegible]

எனக்குத் தெரிந்த

எழுத்து [illegible]

எண் [illegible]

வரைதல் ....................

அடுத்த படிக்குச் செல்ல என்னைத் தயாராக்கிக் கொண்டேன்

[illegible]
ஒப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2011 இற்கு முன்பு

பிரதேச சபையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக முன்பள்ளி செயற்பாடுகள் நடைபெற்று வந்தன.

## 2011 இற்கு பின்பு

மாகாண கல்வித் திணைக்களத்தினால் முன் பள்ளிகள் உள்வாங்கப்பட்டு வலய மட்டத்தில் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளரும், கோட்ட மட்டத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளரும் பிரதேச முன்பள்ளி இணைப்பாளருடாக முன்பள்ளி நிர்வாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது.

பிரதேச மட்டத்தில் மத்திய அரசின் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் முன்பள்ளி பிள்ளை பருவ உத்தியோகத்தர் ஆகியோரின் ஏனைய செயற்பாடுகள் நடைபெறுகின்றது.

ஒவ்வொரு முன்பள்ளிக்கும், முன்பள்ளி முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டு, அதற்கான கடப்பாடுகளில் பிரதானமானவை

- தகுதியான ஆசிரியர்களை நியமித்தல். அவர்களுக்கான வேதன வழங்கல்களை நிர்வகித்தல்.
- சத்துணவு, பால் விநியோகம் தொடர்பான செயற்பாடுகளை கண்காணித்தல்.
- முன்பள்ளி ஆவணங்களை பேணுதல்.
- இடவசதி, உட்கட்டுமானங்கள் தொடர்பான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- சிறுவர்களிற்கான கலை, விளையாட்டு, கண்காட்சி, சுற்றுலா போன்றவற்றிற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- அரச, அரச சார்பற்ற தனியார் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு முன்பள்ளி அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பெற்றோர்களுடனான மாதாந்த சந்திப்புக் கூட்டங்களிற்கு சமூகமளித்தல்.
- குடும்ப மட்ட, பிரதேச மட்ட நிகழ்வுகளிற்கு ஒத்துழைப்பு வழங்குதல்

இன்றைய சின்னஞ்சிறிய சிட்டுக்கள்
நாளைய எஜமானர்கள் - ஆம்
பண்பான கல்வி பக்குவமான அன்போடு
கூடிய கண்டிப்பு இவர்களுக்கான
வளமாக்கிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

undation.
m.org

பாரிலுயர்ந்திட பாரதி மன்றம் பல்லாண்டு வாழியவே
பல்கலை சமய அறிவு நெறிகளை பரப்பிட வாழியவே
எண்டிசை எத்தொழில் ஏற்புற என்றும் இனிதே வாழியவே
எங்கள் பாரதி கலைமன்றம் என்றும் எழிலுடன் வாழியவே

சுந்தரம் சேர்ந்த சுழிபுரம் தன்னில் துலங்கிடும் எம்மன்றம்
துயர் பல களைய இன்புற்று எழுந்திடும் எங்கள் பெருமன்றம்
சூழலைக் காக்கவும் சுகாதாரம் பேணவும் எழுந்திடும் எம்மன்றம்
ஏழ்கடல் வைப்பினும் என்றும் எழில் தரும் எங்கள் பெருமன்றம்

கடல்வளம் தொட்டு களனிகள் வரையும் கவினுற அமைவதற்கும்
கால்நடை முதலாம் பனைவளம் ஈறாம் தொழில்வளம் பெருகுதற்கும்
இளைஞர் மகளிர் இதமுடன் வாழ உழைத்திடும் எம்மன்றம்
இன்னிலமதனில் இன்புற்று வாழ என்றென்றும் வாழியவே.

வாழிய வாழிய வாழிய வாழிய வனப்புடன் வாழியவே
வாழிய வாழிய வாழிய வாழிய வளத்துடன் வாழியவே

பாரதி கலை மன்றம்
சுழிபுரம் மேற்கு
செய்வன துணிந்து செய்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org